ASSISTANT DIRECTOR OF PROSECUTION * KRISHNAGIRI *
No.......
Date.......

குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

**சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அவர்களின்**
**செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை திரு.தி.இரா.சு. இராமமூர்த்தி, பி.பி.ஏ.,பி.எல்.,**

ந.க.எண். 1321/குவதொஇ/அ2/2019-2 நாள். 30/05/2019.
(இயக்கக ஆணை எண் . 64 /2019)

| | |
|---|---|
| சிறு தலைப்பு : | பொதுப்பணிகள் – குற்ற வழக்குத் தொடர்வுத் துறை – திரு.ச. மேகநாதன், இளநிலை உதவியாளர், கிருஷ்ணகிரி குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகம் – பணிவரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணை வழங்குதல் தொடர்பாக. |
| படிக்கவும் : | 1) சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதங்கள் எண் 1354/பிஎஸ்டி–ஜி1/2019 நாள் 30–03–2019 .<br>2) இவ்வியக்கக செயல்முறை ஆணை ந.க.எண், 1321/குவதொஇ/அ2/2019 , இயக்கக ஆணை எண் 46/2019 நாள் 04–04–2019.<br>3) கிருஷ்ணகிரி குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகக் கடிதம் ந.க.எண். 256/அ1/2019 நாள் 12/04/2019. |

**ஆணை:**

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் மற்றும் இயக்கக பணி நியமன ஆணையின் படி திரு.ச.மேகநாதன், அவர்கள் இளநிலை உதவியாள்ராக கிருஷ்ணகிரி குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார். மேற்படி ஆணையின்படி தனியர் 12/04/2019 அன்று முற்பகல் முதல் கிருஷ்ணகிரி குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாள,ாக பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்

தொடர்கிறது-----

2) எனவே, திரு.ச. மேகநாதன், இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களது இளநிலை உதவியாளர் பணிநியமனத்தை தனியர் பணிக்கு அறிக்கை செய்த நாள் முதல் பின்வருமாறு வரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணையிடப்படுகிறது.

| வரிசை எண் | பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம் | பணிக்கு அறிக்கை செய்த நாள் | பணிவரன்முறை செய்த நாள் (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) |
|---|---|---|---|
| 1. | திரு.ச. மேகநாதன், இளநிலை உதவியாளர், கிருஷ்ணகிரி கு.வ.தொ. உதவி இயக்குநர் அலுவலகம் | 12/04/2019 முற்பகல் | 12/04/2019 முற்பகல் |

3)மேற்படி பணிவரன்முறையானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்/மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் தொகுதி 4–ல் அடங்கிய ஒருங்கிணைந்த குடிமையியல் பணிகளுக்கான தேர்வு 2015–16, 2016–17, மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான ஆள் தேர்ந்தெடுப்பு தொடர்பாக தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள நீதிப் பேராணை மனுக்கள் மீதான தீர்ப்புரைக்கு உட்பட்டதாக அமையும்.

4)மேற்படி தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டு, (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) மூன்றாண்டுகள் தொடர்ந்த பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவரது இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு அப்பயிற்சியில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

தொடர்கிறது----

5)மேலும் மேற்படி தனியர் இளநிலை உதவியாளர் நிலையிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1–ல் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

6)எனவே திரு.ச. மேகநாதன், இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகம், கிருஷ்ணகிரி அவர்களின் பணி நியமனத்தை, பணிவரன்முறை செய்யப்பட்ட (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் முதல்) விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இயக்ககத்திற்கு தெரியப்படுத்தும்படி கிருஷ்ணகிரி குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) இந்தச் செயல்முறை ஆணையினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை மறுதபாலில் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

30/5/14

இயக்குநர்,

கு.வ.தொ.துறை, சென்னை–5.

30/5/14

பெறுநர்

1) திரு.ச. மேகநாதன்,
இளநிலை உதவியாளர்,
கு.வ.தொ. உதவி இயக்குநர் அலுவலகம் ,
கிருஷ்ணகிரி – உரிய வழி முறையாக.

2) உதவி இயக்குநர்,
குற்ற வழக்குத் தொடர்வுத் துறை,
கிருஷ்ணகிரி.

நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

நகல் : இயக்கக ஆணைப் பத்தகம்/கோப்புக்கு/இருப்புக் கோப்புக்கு/உபரி.